**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் கூறு I - 2021**

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் கூறு I இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான ருத்துதைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தோகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | | |
| (அ) | நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் காட்டப்பட்டிருந்த ஆதனம், பொறி, உபகரணங்கள் மற்றும் நூல் புத்தகங்களின் மீதியானது, முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் காணப்படாமையால் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 296 | சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படும். | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய கல்வி நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 111 மடிக் கணனிகள் செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டில் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | 33.1 | இக் கணனிகள் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாகக் கணக்கிடப்படும். | சொத்துக்களாக அங்கீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01∴2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி மற்றும் திட்டச் செயற்பாட்டு கைநூலின் 5.1 ஆம் பிரிவு | திட்டத்தின் செயற்பாட்டுக் கைநூல் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் திட்ட வழி நடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில் லை. | எதிர்காலத்தில் குறிப்பு விதிமுறைகளில் (வுழுசு) திட்டமிட்டபடி தேசிய அளவிலான வழி நடாத்தல் குழுவை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் எடுக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் செயற்பாட்டு கைநூலின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 96 ஆம் பந்தி | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறியவாறு உள்ளக கணக்காய்வு | 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் கணக்காய்வு செய்வதற்கு உள்ளடக்கப்பட்டிருந்த | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | துடன் 2021 ஆம் ஆண்டில் கொவிட் - 19 தொற்றுநோயைத் தொடர்ந்து நாடு மூடப்பட்டதன் காரணமாக அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு அமைச்சரவையில் பரிந்துரைக்கப்பட்டதுடன் இதை ஒரு விசேட பணியாகக் கருதி கிளையின் அனைத்து ஊழியர்களையும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் 2021 உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின்படி பொதுக் கல்வித் திட்டத்தை கணக்காய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கூறு I | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | |
| | | சதவீதம் | சதவீதம் | | | |
| (i) | பாடசாலை அடிப்படையிலான கற்றல் மேம்பாடு. | 50 | 26 | கடந்த வருடத்தில் வழங்கப்பட்டிருந்த 50 மில்லியன் தொடர்பான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்களை அமைச்சு பின் தொடரல் செய்யாத போதிலும் மீளாய்வாண்டில் | 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் கொவிட் - 19 தொற்கு நிலைமை காரணமாக பாடசாலைகள் கனிசமானளவு அவ்வப்போது | செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் பதிவுகள் பராமரிக்கப்ப |

| | | |
|---|---|---|
| பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்பு மானியமாக ரூபா 463.25 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. | மூடப்பட்டன. அதனால் சில நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதால் தாமதம் ஏற்பட்டது. நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு ளுடீடுநுபு மூலம் செயற்திட்டங்களை முடிப்பதற்கான காலக்கெடுவை நீடிப்பதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. நீண்ட காலமாக பாடசாலைகள் மூடப்படுவதால் ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத சூழ்நிலைகளை எதிர் கொண்டு முடிந்த வரை முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டது. இருப்பினும் 26.:.2021 சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம் கண்காணிப்பு பொறிமுறையை வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | டல் வேண்டும். |

**3.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயற்திட்டத்தினால் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 844 மில்லியன் நிதியில் ரூபா 738 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டு மிகுதியாகவுள்ள 106 மில்லியன் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் திட்டங்களின் நடவடிக்கைகளுக்கு இப்பணம் சாதகமான அளவில் பயன்படுத்தப்படவில்லை. | 2021 இல் பெரும்பாலான நேரங்களில் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பிரிவிற்குள் குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கு முடியாதிருந்தமையால் நிதி செயற் திறனாகப் பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்வதற்கு ஆரம்ப திட்டத்தை அவ்வப்போது திருத்த வேண்டியிருந்தது. மேலும் பெரும்பாலான பயிற்சி அமர்வுகள் மற்றும் ஏனைய செயலமர்வுகள் நிகழ்நிலையூடாக நடாத்தப்பட்டமையால் அந்த அமர்வுகளுக்கு பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த சில தொகைகள் சேமிக்கப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்காக நிதியைப் பயன்படுத்தப்படல் வேண்டும். |